தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்
CSI Tamil Parish Al-Ain, UAE

# மன்னா..



கர்த்தாவே, நீர் அவர்களைக் காப்பாற்றி, அவர்களை என்றைக்கும் இந்த சந்ததிக்கு விலக்கிக் காத்துக்கொள்ளுவீர். சங்கீதம்/PSALMS 12:7

பொழிவு: 13
ஆகாரம்: 11

Nov '2021

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்யென்

# C.S.I. TAMIL PARISH ALAIN, UAE

| REGULAR SERVICE | BIBLE STUDY | CHILDRENS BIBILE SCHOOL |
|---|---|---|
| FRIDAY'S<br>6:30 PM – 7:30 PM<br>CHURCH<br>MAIN HALL<br><br>EVANGELICAL CHURCH CENTRE,<br>KENAD HOSPITAL CAMPUS,<br>ALAIN, UAE | WEDNESDAY'S<br>7:30 PM – 8:30 PM<br><br>ONLINE<br>zoom<br><br>CONT: REV. S. P. BASKAR<br>056 7668 343 | FRIDAY'S<br>4:00 PM – 5:30 PM<br><br>ONLINE<br>zoom<br><br>CONT: MRS. AUGUSTA LAWRANCE<br>056 641 1676 |
| **MEN'S FELLOWSHIP** | **WOMEN'S FELLOWSHIP** | **YOUTH FELLOWSHIP** |
| 2'ND THURSDAY<br>7:30 PM – 9:00PM<br><br>ONLINE<br>zoom<br><br>CONT: MR. ASHOK KUMAR<br>050 842 9659 | 3'RD THURSDAY<br>7:30 PM – 9:00PM<br><br>ONLINE<br>zoom<br><br>CONT: MRS. SHALY MELBIN<br>056 394 1817 | 4'TH THURSDAY<br>7:30 PM – 9:00PM<br><br>ONLINE<br>zoom<br><br>CONT: MR. SANTHOSH KUMAR<br>056 875 2723 |

## OTHER MEETINGS – VIA ZOOM

MONTHLY FASTING PRAYER: 1ST FRIDAY 11:AM TO 1:00PM

MONTH END/NEW MONTH STARTING PRAYER: (LAST DAY OF MONTH) 11:30 PM TO 12:30 PM

FOR MINISTRY DETAILS & ENQUIRES – PLEASE CONTACT

REV. S.P. BASKAR, THE PRESBYTER
CSI TAMIL PARISH ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org

# From Pastor's Desk

## REV. S.P. BASKAR



கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

**ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!** இந்த மாதத்தில் (நவம்பர்) சில சிறப்பு தினங்களை நினைவு கூற அழைக்கப்படுகிறோம்.

**சகல பரிசுத்தவான்களின் தினம் (ALL SAINT'S DAY)**

சகல பரிசுத்தவான்கள் தினம் என்பது நவம்பர் 1-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. இது பரிசுத்தவான்கள் (அ) புனிதர்கள் என்பவர்கள் அன்றாடம் தங்களின் வாழ்வில் பரிசுத்தமாய் வாழ்ந்தது உன்னதமாக, மேன்மையான வாழ்வு பெற்றவர்கள் என்பதை நினைவு கூறவும் அவர்களின் முன்மாதிரியான வாழ்வை பின்பற்றவும் இந்த நாள் நமக்கு கற்றுக் கொடுக்கிறது.

எபிரேயர்: 13:7-இன் படி "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தியவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்"

தொடக்ககாலத் திருச்சபையிலிருந்து புனிதர்கள் போற்றப்படுகிறார்கள், தொடக்க காலத்தில் திருச்சபையின் வரலாற்றில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் "தூயவர்களின் வாழ்விலே மாதிரியையும் அவர்களின் ஒன்றிப்பிலே தோழமையையும், அவர்களின் பரிந்து பேசுவதிலே உதவியையும் அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம்" என்பதை அறிவுறுத்தியது.. இந்த சிந்தனைகளை நினைவு கூறும் தினம் தான் சகல பரிசுத்தவான்களின் தினம் ஆகும்..

**சகல ஆத்துமாக்களின் திருநாள் (ALL SOUL'S DAY)**

சகல ஆத்துமாக்களின் தினம் நவம்பர் 2-ஆம் நாள் நினைவு கூறப்படுகிறது. சகல ஆத்துமாக்களின் திருநாள் என்பது மரித்தோரை நினைத்து அவர்களின் வாழ்வுக்காக நன்றி செலுத்தி ஜெபிக்கும் நாள் ஆகும். இதனை கல்லறைத் திருநாள் என்றும் அழைக்கப்படுகின்றனர். கி.பி.1048-இல் குளுனி (Cluny) என்கிற இடத்திலிருந்து துறவி மடத் தலைவர் ஒடிலோ (Odilo) என்பவர் மரித்துப்போன அனைவருக்காகவும், பொதுவான மன்றாட்டு ஏறெடுக்கும் நாளை அறிமுகப்படுத்தினார்.

இதுவே சகல ஆத்துமாக்களின் திருநாளாக கொண்டாடப்படுகிறது. இந்த நாள் கொண்டாடப்படுவதின் நோக்கம் இறந்தவர்களை நினைவு கூற வேண்டும், அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும், அவர்களின் வாழ்வுக்காக நன்றி கூற வேண்டும் என்பதாகும்.... ஏசாயா:57:2-இல் நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்..

## சிறுவர்கள் தினம் (CHILDREN'S DAY)

மறைந்த இந்திய நாட்டின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14-ஆம் நாள் ஆண்டுதோறும் சிறுவர்கள் தினமாக இந்தியாவில் கொண்டாடப்பட்டு வருகிறது. குழந்தைகள் மீது நேரு காட்டிய அன்பை வெளிப்படுத்தும் விதமாகத்தான் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. "தன் குழந்தையை தாண்டி அனைத்து குழந்தைகள் மீதும் நேசத்தை வெளிப்படுத்தியதையே நேருவின் வாழ்வும், வரலாறும் காண்பிக்கிறது. 1925-ஆம் ஆண்டு ஜெனிவாவில் குழந்தைகள் நல்வாழ்வு தொடர்பாக ஒரு சர்வதேச மாநாடு நடைபெற்றது. இதில் சிறுவர்களுக்கான அடிப்படை உரிமை, கல்வி பற்றி அறிவுறுத்தப்பட்டது. அதற்கு பிறகு 1954-இல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது சபை சர்வதேச குழந்தைகள் தினம் என்று கொண்டாட அழைப்பு கொடுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து பல்வேறு நாடுகளில் சிறுவர் தினம் கொண்டாட தொடங்கப்பட்டது.

இயேசு சிறு பிள்ளைகளை குறித்து சொல்லும்போது... மத்தேயு:19:14'இல் சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; பரலோக ராஜ்ஜியம் அப்படிப்பட்டவரகளுடையது என்றார்...

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, புதிய மாற்றங்களைத் தந்து பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கிறோம். இந்த கோவிட் காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்'19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக... உயர் கல்விக்கு சொல்லுகின்ற நமது பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும் வாழ்த்தவும் அழைக்கப்படுகிறோம்...

அத்துடன் நமது திருச்சபையில் வருகின்ற காலங்களில் நடக்க இருக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்காக குறிப்பாக கிறிஸ்து பிறப்பின் நாளின் நிகழ்ச்சிகளுக்காக ஜெபிக்குமாறு அழைக்கப்படுகிறோம்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்...

*Rev. S. P. Baskar*




# ஆண்டவரின் உதவிக்காக மன்றாடல்

கர்த்தாவே, நீர் அவர்களைக் காப்பாற்றி, அவர்களை என்றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்கிக் காத்துக் கொள்ளுவீர். சங்கீதம்: 12:7

You, O LORD, will keep them; you will guard us from this generation forever. Psalm 12:7

**முன்னுரை:**

நீதி, நேர்மை இல்லாத நிலை, வஞ்சகம், பொய் இவற்றை கொண்டு தலைவிரித்தாடும் நிலையில் பொய்யற்களையும், அநீதிகளையும், நேர்மையற்றோரையும், அழித்து நல்லோர்கள், நேர்மையானவர்கள் இவர்களை பாதுகாக்க வேண்டிப்பாடப்பட்ட பாடல் ஆகும். ஆண்டவரின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து பொல்லாதவர்களின் தீய திட்டங்களில் இருந்து விடுதலைப் பெற ஆண்டவரின் உதவிக்காக மன்றாடும் அடியவரின் புலம்பல் அல்லது குமுறல் எனப் புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்...

Psalm 12 This is a community lament, describing a time when liars are in positions of authority...

சங்கீதம்:12:1-4 தீயோருக்கு எதிராக ஆண்டவரிடம் முறையிடுதல்....

வச:1-..... இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்... பக்தியுள்ளவன் என்பது இறையன்பர், மெய்யடியார் என்பதாகும் இதற்கு "ஷாசீது" என்ற எபிரேயச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு "பேரன்பு" என்பதாகும். மேலும் இறைவனுக்கு பிரியமானவர் என்பதாகும். இப்படிப்பட்டவர்கள் கடவுளையும் பிற மனிதரையும் அன்பு செய்பவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட நல்லவர்கள் இல்லையே என்று ஆண்டவரிடம் புலம்பி முறையிடுகிறார்.....

வச:2..... இச்சக உதடுகளால் இரு மனதாய்ப் பேசுகிறார்கள்.... இப்படிப்பட்டவர்கள் உள்ளத்தில் ஒன்று வைத்துக்கொண்டு உதட்டிலே வேறொன்றைக் கூறுதல். ஒரு மனதோடு உறுதியாக இல்லாமல் பிறரை வஞ்சித்து ஏமாற்றுதல் இப்படிப்பட்ட மனம் உடையவர்களுக்காக ஆண்டவரிடம் முறையிடுதல்....

## சங்கீதம் 12

வச:3... பெருமைகளைப் பேசுகிற நாவு.... இந்த நாவு உள்ளவர்கள் பெருமை யடித்துக் கொள்பவர்கள், தீமை செய்பவர்கள், தீய குணமுடையவர்கள் ஆகியோரை குறிப்பதாகும். இப்படிப்பட்டவர்களுக்காக ஆண்டவரிடம் முறையிடுதல்...

வச:4... எங்களுக்கு ஆண்டவர் யார்..... என்பது தீயவர்கள் எங்களுக்கு ஒருவரும் இல்லை, கடவுள் கூட இல்லை என்று கூறுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட தீயோர்கள் அற்றுப்போவார்களாக என்று ஆண்டவரிடம் முறையிடுவது ஆகும்...

சங்கீதம்: 12:5-ஆண்டவரின் பதில்

வச:5... எளியவர்கள் விடும் பெருமூச்சினிமித்தமும்.......
இது எளியோரின் புலம்பலையும், வறியோரின் பெருமூச்சையும் கேட்டு இப்பொழுதே எழுந்து வருகிறேன். அவர்கள் ஏக்கத்தின்படி (அ) எதிர்பார்ப்பின் படி அவர்களை பாதுகாப்பேன் என்று ஆண்டவர் பதிலாக கூறுகிறார்....

சங்கீதம்: 12:6-8-ஆண்டவரிடம் நம்பிக்கை

வச:6-ஆண்டவரின் வாக்குறுதிகள் தீயோரின் பொய் வார்த்தைகளுக்கு எதிராக இருந்தது. "ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது".

ஏழு என்ற என் இஸ்ரயேலரிடையே முழுமையை நிறைவை சுட்டிக் காட்டுவது ஆகும். எனவே ஆண்டவரின் வாக்குறுதிகள் முற்றிலும் உண்மையானவை, தூய்மையானவை என நம்பிக்கை வைத்தார்கள்..

கர்த்தாவே, நீர் அவர்களைக் காப்பாற்றி, அவர்களை என்றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்கிக் காத்துக் கொள்ளுவீர். சங்கீதம்: 12:7

நிறைவாக: இன்றைக்கு நாமும் இந்த உலக வாழ்வில் தீயோரை புறம்தள்ளி நல்லவர்களாய் வாழ்ந்து ஆண்டவருக்குள் மகிமையாய் வாழ அர்ப்பணிக்கவும், தீய சக்திகள் அகற்றப்பட ஜெபிக்கவும் அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்...
Rev. S. P. Baskar








**முன்னுரை:**

ஆண்டவர் இயேசுவின் காலத்தில் அல்லது அவருடைய திருப்பணியில் பெண்களின் நிலை எப்படி இருந்தது என்பதை புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இதை புரிந்து கொள்வதற்கு இயேசுவின் காலத்தில் இருந்த அரசியல், கலாச்சாரம், சமூகம் இவைகளை நினைவுப்படுத்திக் கொள்ள அழைக்கப்படுகிறோம். இயேசுவின் காலத்தில் இருந்த அரசர்கள், அதிகாரிகள் மக்களை பிரித்துக் காண்பித்தனர். குறிப்பாக பெண்களை சமூகத்தில்,சமயத்தில், அரசியலில் மிகவும் குறைவாக மதிப்பீடு செய்தார்கள். இந்த நிலையில்தான் இயேசுவின் பணி தொடங்கப்பட்டது. இயேசு கிறிஸ்து பெண்களுக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவத்தைக் கொடுத்தார் என்பதை புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

**இயேசுவின் பிறப்பில் பெண்களில் பங்களிப்பு:**

இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் பல பெண்களின் பங்களிப்பு சிறப்புத் தன்மை பெற்றது

- தாமார்,
- ராகேல்,
- ரூத்,
- உரியாவின் மனைவி,
- மரியாள்

**இயேசுவின் ஊழியத்தில் பெண்களின் பங்களிப்பு**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் பெண்களின் பங்களிப்பு சிறப்புத்தன்மை பெற்றவையாகும்.

- சீடத்துவத்தில் பெண்கள்-லூக்கா: 8:1-3
- இயேசுவின் முதல் அற்புதத்தில் பெண்கள் (கானாவூர் கல்யாணம்). யோவான்: 2:1-11
- இயேசுவின் நற்செய்திப் பணியில் பெண்கள் (சமாரியப் பெண்). யோவான்: 4:1-19

**இயேசுவின் விடுதலைப் பணியில் பெண்கள்**

- பண்ணிரெண்டு வருடம் பெரும்பாடுள்ள பெண்ணின் வாழ்வில் விடுதலை. மாற்கு:5:25-34
- பரிமளம் தைலத்தை இயேசுவின் சிரசில் ஊற்றிய பெண்ணின் வாழ்வில் விடுதலை. மத்தேயு:26:5-13
- கானானிய பெண்ணின் வாழ்வில் விடுதலை. மத்தேயு: 15:21-28

**இயேசுவின் சிலுவை மரணம் -உயிர்த்தெழுதலில் பெண்களின் பங்களிப்பு**

- இயேசுவின் சிலுவை மரணத்தின்போது அவரை பின்தொடர்ந்து வந்த பெண்களுக்கு"எருசலேம் குமாரத்திகளே அழாதீர்கள்" என்றார். லூக்கா: 23:28
- சிலுவையில் தொங்கிய இயேசு அவர் சொன்ன மூன்றாம் வார்த்தை"ஸ்திரியே அதோ உன் மகன்" என்றார். யோவான்: 19:27
- இயேசுவை கல்லறையில் தேடிய பெண்கள். மாற்கு:16:1-4
- இயேசுவின் உயிர்த்தெழுதல் கட்சியை பார்த்து அதை அறிவித்தவர்கள் பெண்கள். மாற்கு:16:9

இப்படியாக பெண்கள் இயேசுவின் பிறப்பில், திருப்பணியில், மரணத்தில், உயிர்த்தெழுதலில் அவரோடு இருந்து பணி செய்து இருக்கிறார்கள் என்பதை புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்....

**முடிவுரை:**

இயேசுவின் காலத்தில் பெண்கள் எப்படி முக்கிய படுத்தப்படுகிறார்கள் என்பதை புரிந்து கொள்கிற நாம் இன்றைக்கு பெண்களுக்கு திருச்சபையில், சமயத்தில், சமுதாயத்தில் பெண்கள் கிறிஸ்துவுக்காக முக்கியத்துவம் கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயரம்மா...

*Mrs. E. Nancy Baskar....*

Jesus & Women

IN THE FIRST CENTURY AND NOW

# KORIJHOLLA CHURCH PROJECT

# கொரிஜ்ஹோலா ஆலயத் திட்டம்






கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபையின் அங்கத்தினர்களே, நமது திருச்சபையின் ஆண்கள் சங்கம் மூலமாக ஒடிசா மாநிலத்தின் கொரிஜ்ஹோலா கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயத்திற்கான அஸ்திபாரம் கர்த்தருடைய பெரிதான கிருபையால் 13'அக்டோபர் அன்று போடப்பட்டது..தொடர்ந்து வேலைகள் நடைபெற்று வருகிறது.

**கர்த்தருடைய ஆலயத்தை இணைந்து கட்ட அனுதின ஜெபத்தாலும் ஒன்றிணைவோம்.**

## இணைந்து கட்டுவோம் வாருங்கள்

# தமிழும் - தமிழ்நாடும்

**தமிழகத்தில் கிறித்தவ சமயத்தின் தொடக்கம்:** கிறித்தவம் தமிழ்மண்ணில் வேரூன்றக் காரணமாக அமைந்தவர் இயேசு கிறித்துவின் சீடர்களுள் ஒருவரான புனித தோமா ’என்று பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அவர்கள் ஆதாரமாகக் காட்டுவன இவை: இன்றைய கேரள மாநிலத்தில் வந்திறங்கிய புனித தோமா, கிபி 52-72 ஆண்டுகளில் கிறித்தவ சமயத்தை அறிவித்து, மயிலாப்பூரில் உயிர்நீத்தார் என்னும் வாய்மொழி மரபு கேரள கிறித்தவர்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ளது; கிபி முதல் நூற்றாண்டுகளிலிருந்தே கிறித்தவ எழுத்தாளர்கள் புனித தோமா இந்தியாவுக்குக் கிறித்தவத்தைக் கொணர்ந்தார் எனக் குறிப்பிட்டுள்ளனர். சென்னை சாந்தோம் தேவாலயம் புனித தோமாவின் கல்லறை இருந்ததாகக் கருதப்படும் இடத்தின்மேல் கட்டப்பட்டது. கிபி 13ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த மார்க்கோபோலோ போன்ற கிறித்தவப் பயணியர் மயிலாப்பூரில் புனித தோமாவின் கல்லறையைச் சந்தித்த குறிப்புகளை விட்டுச்சென்றுள்ளனர்.

**தமிழுக்கு மேனாட்டுக் கிறித்தவர் ஆற்றிய தொண்டு:** கிபி’15ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து, போர்த்துகீசியரின் ஆதரவின் கீழ் பல கிறித்தவ மறைபரப்பாளர்கள் ஒல்லாந்து, செருமனி, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, போன்ற நாடுகளிலிருந்து வந்து, தமிழகத்தில் கிறித்தவ மறையைப் பரப்பினார்கள்.

**தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களித்த சில தமிழகக் கிறித்தவர்களின் பட்டியல்:** வேதநாயகம் சாஸ்திரியார் (1774 -1864), சாமுவேல் வேதநாயகம் பிள்ளை (1826–1889), என்றி ஆல்பிரட் கிருஷ்ணபிள்ளை (1827–1900), ஆபிரகாம் பண்டிதர் (1859–1919), சேவியர் தனிநாயகம் (1913–1980)- யாழ்ப்பாணம், தமிழ்நாடு.

**தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிந்த மேலைநாட்டுக் கிறித்தவர்கள் சிலர்:** இராபர்ட் தெ நோபிலி (1577–1656), வீரமாமுனிவர் (1680–1746), பர்த்தலோமேயு சீகன்பால்க் (1682–1719), இராபர்ட் கால்டுவெல் (1814–1891), ஜி. யூ. போப் (1820–1908).

MEN'S FELLOWSHIP ARTICLE BY: MR. KINGSLY STUBERT

# NATURE IS OUR BEST TEACHER



There is always a way to begin all over
This is what the blooming flowers and leaves and grasses covered in morning dew makes me feel.

There is always an open world in front of us
This is what the vast sky makes me feel



There can always be new ideas to contribute.
This is what the cool breeze makes me feel

There is always love, care and kindness left.
This is what the creatures tell me

There is always a hope and belief in life.
This is what the free flying birds show

There is always a way to happiness and joy
This is how the sweet fragrance of nature makes me feel

There is always hope when we are in the dark.
The moon and the stars are the proof of it.

There is always comes a time when we are healed and cleansed for the sins, we make all we need to do is accept and …
The Rain is the Proof of it



There is always a beautiful memory of struggling to reach our dreams.
The mountains are the proof of it.


There is always a beautiful result of what we do with hard work and honesty
This is what the sweet fruits try to tell.

There is always a time for each one of us.
The changing seasons are the proof of it.

There is a beautiful life ahead and that we must keep going a head
This is what the water wave of the rivers shows.

There is always a colorful time after deep dark hours filled with tears
The rainbows are the proof of it

We can always keep learning from what we see
Nature is our Best Teacher



**Job 12: 7-9**

- But now ask the beasts, and they will teach you. And the birds of the air. And they will tell you.

- Or speak to the earth and it will teach you, and the fish of the sea will explain to you

- Who among all this does not know that the hand of the Lord has done this.

*Article by: Mrs. Shalini Rajesh*

Women's FELLOWSHIP




(லூக்கா 18:13)



**ஆயக்காரன் தன்னுடைய வாழ்க்கையில் தான் தகுதியற்றவன் என்கிற உணர்வோடு கடவுளுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறதைப் பார்க்கிறோம்.** நம்முடைய பாவத்தின் உண்மையான நிலையை நாம் உணருவது நல்ல ஒரு ஆரோக்கியமான ஆவிக்குரிய அடையாளம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் வாழ்க்கையில் சரியான நிலையில் இருக்கிறோம் என்று எண்ணும்போது மாத்திரமே தேவனுக்குத் தூரமாகக் காணப்படுகிறோம். ஆயக்காரன் இப்படி ஜெபம் பண்ணினதைப் பார்த்த இயேசு சொல்லுகிறார், “அவனல்ல, **இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்”.**

நம்முடைய வாழ்க்கையில் மெய்யாலுமே நம் இருதயம் நருங்குண்டு நொறுங்குண்டு இருக்குமானால், ஒன்றை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அது தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதே. தேவன் நமக்கு மிக நெருக்கமாக இருக்கிறார். நாம் இந்த உலகத்தில் எவற்றையெல்லாமோ ஆவிக்குரிய காரியங்கள் என்றெண்ணி மதச் சடங்குகளைச் செய்தோமானால் தேவன் நமக்கு நெருக்கமாக இருப்பதில்லை. ஆனால் நம்மைத் தாழ்த்தும் பொழுது நம் இருதயம் தேவன் பக்கமாகத் திரும்பும் பொழுது தேவன் நமக்கு நெருக்கமாக இருக்கிறார். ஒரு விதத்தில் சொல்லுவோமானால் அது தேவனை முழுமையாகச் சார்ந்துகொள்ளுவதைக் குறிக்கிறது. நம்முடைய இயலாமையை ஒப்புக்கொள்வதாகும்.

இவ்விதமான ஜெபத்தைத் தேவன் அங்கீகரிக்கிறார். நருங்குண்ட நொறுங்குண்ட இருதயத்தை தேவன் ஒருக்காலும் புறக்கணிப்பதில்லை. அது அவருக்குப் பிரியமான பலியாக இருக்கிறது.

**நாம் இந்த ஆயக்காரனைப் போல நம்மைத் தாழ்த்தும்போது நீதிமானாக தேவன் அங்கீகரிக்கிறார். நம்மை முடிவு பரியந்தம் பாதுகாக்கிறார்.**

**MAKE PRAYER A HABBiT**

# LIFE OF A PENCIL



A teacher gifted a pencil to each of his students and asked them to list the lessons of life that they could learn from a pencil. One of them wrote

**1** **Each pencil has a definite purpose**. It draws a line as it moves forward. This line becomes specific letters, words, phrases, sentences and a finally, a unique presentation with a meaningful message. Every person is a special noble creation of God with a particular purpose, role and mission in the world. By our life and actions, we have to fulfil the intention of the Creator.

**2** **A pencil permits to be held and guided by a hand to perform with perfection.** We must be ready to be guided by the will, words and hands of God. We must be humble and ready to surrender ourselves to the will of God. That is the only way to achieve great things in life.

**3** **A pencil leaves a definite mark on the surface on which it moves.** By doing our duties with dedication, we must leave our mark on every situation we are involved in and every person we interact with. That is the mark of our Creator which He uses to change the world through each of us.

**4** **The most important part of a pencil is its inside.** The lead made of graphite is what enables it to leave a mark on the surface on which it moves. The decorated outer wooden portion may have visible beauty, but appearances can be deceptive. The quality of the pencil is decided by the inner lead. The eternal soul within us is more important than the perishable body which houses it. The inner beauty and virtue of a person cannot be judged by his external appearance.

**5** **A pencil is used along with an eraser.** The eraser is attached to the other end of a pencil. Though a mark of correction may remain, the eraser enables immediate correction of any mistake made. We may make mistakes in life as "to make mistakes is human". But a noble man corrects his error at the earliest. We must learn from our mistakes and proceed in pursuit of perfection.



**6** **A pencil has to be sharpened and polished frequently to serve its function with perfection.** Human life requires occasional painful sharpening to achieve its goal. Sharpening of human life is through the adversities and painful experiences man may have to endure in life. They lead to physical, mental and spiritual strengthening and regeneration.

**7** **Applying too much pressure on a pencil while writing can break the tip of the lead causing great damage and hindrance to smooth writing.** Unnecessary stress and strain from thinking about your future may damage our life and progress. When we are ready to accept the will of God, life becomes steady, pleasant and enjoyable.


## "We are all pencils in the hand of God"

- St. Mother Teresa

Article by: Mr. Joshua Koshy



# KINDER & BEGINNER - ARTICLE





JANIA PRENI



HARYTER SAMUEL




HAZEL HARTLYN




REAGAN SHAN




CHRIS GABRIEL




JESIL BERNICE

**Teacher: Mrs. Jonish Herchil**

# KIDS COLOURING



THE *Family* THAT PRAYS TOGETHER STAYS *Together*

# Jesus Teaches About Prayer



Ask

Seek

Knock

For everyone who asks receives; he who seeks finds; and to him who knocks, the door will be opened. Luke 11:10 (NIV)

The puzzle is based on Luke 11:1-9 (NIV).

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | R | A | Y | Y | B | S | L | E | F | X | E | B | P | H |
| U | K | I | N | G | D | O | M | L | T | S | P | D | Q | A |
| A | Y | Z | A | U | B | Q | Q | S | E | E | E | R | X | L |
| U | Q | B | S | B | U | R | W | F | Z | A | A | E | G | L |
| O | R | R | K | P | U | J | I | U | R | Z | D | C | K | O |
| O | N | E | O | L | F | N | P | I | P | I | A | Q | H | W |
| T | A | A | P | X | A | A | F | V | I | X | E | M | M | E |
| E | M | D | E | D | M | F | T | W | T | F | S | N | U | D |
| M | E | C | N | H | R | D | O | H | N | L | F | B | D | W |
| P | P | K | K | R | N | E | G | R | E | S | M | Y | Y | U |
| A | V | N | I | I | Q | I | C | C | G | R | T | C | D | Y |
| T | N | O | F | U | N | J | C | E | S | I | N | S | A | O |
| I | J | C | W | D | K | S | D | G | I | J | V | Q | I | A |
| O | Q | K | I | F | B | E | K | P | I | V | J | E | L | A |
| N | M | M | W | N | M | J | J | P | V | W | E | M | Y | P |

Primary

| | | | | |
|---|---|---|---|---|
| FIND | PRAY | OPEN | TEMPATION | FRIEND |
| SEEK | FATHER | NAME | KNOCK | RECEIVE |
| MIDNIGHT | DAILY | TEACH | LEAD | BREAD |
| SINS | KINGDOM | HALLOWED | FORGIVE | ASK |




LORD... I CAN'T SAY IT IN WORDS...

CAN YOU PLEASE LISTEN THROUGH MY HEART

Primary junior



**Down**

**2.** And the ________


**3.** thy ________ come

**4.** Lead us not into _________

**6.** hallowed be thy __________

**8.** thy will be done on __________

**10.** Give us this day, our daily ______




**Across**

**1.** forgive those who ________ against us

**5.** And _____ us our trespasses

**7.** Who art in ___________

**9.** Our ___________

**11.** And the __________

**12.** Forever, and Ever _________





1. Read Matthew 26:39-44. What is the difference between the type of prayer described in Matthew 6:7 and the persistent prayer of Jesus?

2. What do John 9:31 and John 15:7 teach us about prayer? If our Father knows what we need before we ask Him, why should we pray?


3. What makes our prayers (and prayer requests) acceptable to God?

4. What is the Key to Effective Prayer?

# FIND THE BIBLE VERSE




Unable to find...?
The answer key is hidden somewhere in this book.




# 2-Corinthians

# 2-கொரிந்தியர் 1-13

## NOV'21-QUESTIONS

1. யாருக்கு நற்காந்தமாயிருக்கிறோம்?
2. முக்காடு எப்போது எடுபட்டுப்போகும்?
3. சுவிசேஷம் யாருக்கு மறைபொருளாய் இருக்கும்?
4. எந்த நாட்டிற்கு வந்தபோது இளைப்பாறுதல் இல்லாமல் இருந்தார்கள்?
5. தர்ம காரியத்தை தொடங்கியது யார்?
6. தேவன் யாரிடத்தில் பிரியமாய் இருக்கிறார்?
7. உத்தமன் யார்?
8. அரேத்தா ராஜாவின் சேனைத் தலைவன் எந்த பட்டணத்தை சேர்ந்தவன்?
9. பவுல் மூன்று முறை கர்த்தரிடத்தில் எதற்காக வேண்டிக்கொண்டேன் என்றார்?
10. ஒருவரையொருவர்------------------------------------------------ வாழ்த்துங்கள்?

### அக்டோபர் 'மாத விடைகள் / எழுதியவர்கள்

1. 1-கொரி: 1:22 | 2. 1-கொரி: 3:4 | 3. 1-கொரி: 4:15 | 4. 1-கொரி: 6:10
5. 1-கொரி: 8:1 | 6. 1-கொரி: 10:26 | 7. 1-கொரி: 11:14 | 8. 1-கொரி: 14:20
9. 1-கொரி: 15:5-7 | 10. 1-கொரி: 16:8

திருமதி.ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ஹெலன் கம்பீரம், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, செல்வி.அஜீன்ஷா, செல்வி.ஷெறின்ஷா, திருமதி.ஜமுனா ராணி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.அகஸ்டா லாரன்ஸ், திருமதி.பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி.பமீலா டேனியல், திருமதி.ஜெயந்தா ஜாண், செல்வி.ஜெரின் மேக்டலின், திருமதி.ஷெரின் டியென்ஷன், திருமதி.ஹெப்சிபாய் நேசமணி, செல்வி.ஜோஷிகா வஷினி, திருமதி.அனிதா.எஸ்.ராஜன்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

**Your Name / Bible Quiz / Nov'21 | Sent to: csitcalain@gmail.com**



# NOVEMBER
## BIRTHDAYS

| | |
|---|---|
| 1 Nov | Mr. M.C.Christopher |
| 6 Nov | Mr. Paul Gnana Prabu.R |
| 8 Nov | Mstr. Joash Cyrus S/o Mr. Ashok Daniel Prabakaran |
| 9 Nov | Mrs. Sunitha Ravindra |
| 9 Nov | Baby. Jibrilin U.S Shasmitha D/o Mr. Ujin Raj |
| 12 Nov | Ms. Jenisha Christina D/o M.C.Christopher |
| 14 Nov | Ms. Bessy Rose D/o Mr. Justin Oliver |
| 14 Nov | Mrs. Jein Arputhakani Rajavel |
| 15 Nov | Mstr. Jahosh S/o John Joseph |
| 17 Nov | Mrs. Harika Chandrasekar |
| 19 Nov | Mr. Prince Emmanuvel |
| 19 Nov | Mr. Stanly G |
| 21 Nov | Mr. Lawrence Gambeeram |
| 23 Nov | Mrs. Ceciliya Rajkumar |
| 23 Nov | Mstr. Joel – S/o Dr. Shino Mathew |
| 25 Nov | Ms. Abiya – D/o Mr. Sankaran Chinniyan |
| 26 Nov | Baby. Evalina – D/o Mr. Jayan Dharmaraj |
| 27 Nov | Mrs. Suja Jasmine Messiah Das |
| 27 Nov | Mrs. M Aishwariya – W/o Mr. Vinith Samuel |
| 27 Nov | Mrs. Annie Selvi W/o Mr. Danesh Rao |
| 28 Nov | Mrs. Josephine Nmshi W/o Mr. Prince Emmanuvel |
| 29 Nov | Mr. S. Deva Prakash |



The Lord bless you and keep you; the Lord make his face to shine upon you and be gracious to you; the Lord lift up his countenance upon you and give you peace. Numbers 6:24-26.

# November – Wedding Anniversary

| |
|---|
| 8TH NOV - MR. PREM JENIFFER & MRS. BABY CHRISTY MONALIZHA |
| 23RD NOV - MR. STANLY. G & MRS. GOLD JENCY R |
| 30TH NOV - MR. BABU ABRAHAM & MRS. BABITHA |

# Manna Participants – October'21

| KIDS COLOURING | WORD SEARCH | CROSS WORD | BIBLE QUIZ |
|---|---|---|---|
| JESIL BERNICE | JOHAN SANJO | ROSHAN | ROSHAN |
| HAZEL HARTLYN | JASON ERIC | SHELBINO | SHELBINO |
| REAGAN SHAN | AJINSHA | AJINSHA | AJINSHA |
| CRASSLIN DEVONA | SHERINSHA | SHERINSHA | SHERINSHA |
| CHRIS GABRIEL | JEREMIAH | JASON ERIC | JASON ERIC |
| JASON ERIC | JONATHAN | JOSHUA | JOSHUA |
| JANIA PRENI | | JOSHIKA | JOSHIKA |
| JOHAN SANJO | | JEREMIAH | JONATHAN |
| JEMIMA ASHNI | | JONATHAN | |
| JEREMIAH | | | |
| AJINSHA | | | |
| SHERINSHA | | | |




ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

***Email Subject:*** ***Your name / Quiz type / Month-Year***

***To Church Email:*** ***csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org



